1987 ஏப்ரல் 4]

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காக (Proposal) ஒன்று உருவாகி, திட்ட மதிப்பீடுகள் தயார் செய்கின்ற நேரத்தில் கீழ்புறத்திலுள்ளவர்கள் அதற்குத் தடை வாங்கிவிட்டார்கள். அதன்காரணமாக செயலாக்க முடியவில்லை. எனவே இதுபோன்ற வழக்குகளில் தனியார்கள் நீதிமன்றம் சென்று, ஸ்டே வாங்கிவிடுகிற காரணத்தால், இதைப் போன்ற வளர்ச்சித் திட்டங்கள், அதாவது அணைக்கட்டு கட்டுவது, மற்றுமுள்ள வேலைகள் எல்லாம் தடை செய்யப் படுகின்றன. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கெங்கு அணைகள் கட்டுவதற்கு தடை இருக்கிறதோ, அங்கெல்லாம் ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்க, அணைகள் கட்ட, வேலைகள் மும்முரமாக நடைபெற நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொன்ன யோசனை நல்ல யோசனை. ஆனால் சட்டத் துறையோடு கலந்து செய்யவேண்டும். முடிந்தவரையில் முயற்சிக்கலாம்.

உசிலம்பட்டி தாலுக்கா, உத்தப்பநாயக்கனூர், மலட்டாறு நீர்த்தேக்கத் திட்டம்.

299—(* வினா எண் 8691) திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தாலுக்கா, உத்தப்ப நாயக்கனூர் அருகே ஏற்படுத்தப்பட உள்ள மலட்டாறு நீர்த்தேக்கத் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டத்தில் உத்தப்ப நாயக்கனூர் அருகே மலட்டாறு ஓடையின் குறுக்கே ஒரு கண்மாய் அமைக்கும் திட்டத்திற்காக ரூ. 49.23 லட்சத்திற்கு மதிப்பீடு ஒப்பளிக்கப்பட்டு, மார்ச் மாதம் 1986-ல் தலைமைப் பொறியாளர் (சிறுபாசனம்) அவர்களால் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு உள்ளது.